வெலிகம பிரதேச சபை - 2022

------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

வெலிகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, வெலிகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 10 அறிவித்தல் பலகைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 403,600 தொகைக்கான அறிவித்தல் பலகைக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான டெபே டெக்டர் டேலரின் ரூபா 330,000 தொகை பெறுமதியினை மோட்டார் வாகனம் மற்றும் மாட்டு வண்டியின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பெற வேண்டிய நிர்மாண வேலைக் கடன்பட்டோர் ரூபா 967,925 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 113,699 தொகைக்காக பலவினக் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாணவேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 10,785,409 தொகையினால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது, | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக சீராக்கல் மேற்கொள்ளும் போது ரூபா 49,425,340 இற்கான செலவு மீதியொன்று குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 5,093,543 இனால் எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டம் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது மாதாந்த ஒன்றித்த பெறுவனவு பொழிப்பின் படி 04 வருமானத் தலைப்புக்களுக்கு கிடைத்திருந்த ரூபா 303,524 இற்கான வருமானம் குறிப்பிட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் போது 3 வருமானத் தலைப்புக்கள் தொடர்பாக வருமானம் ரூபா 2,151,366 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் போது காணிகள் மற்றும் கட்டிடங்கள் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,106,381 தொகைக்கான செலவு காணிகள் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவுகள் ரூபா 790,000 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் போது 04 செலவுத் தலைப்புக்கள் தொடர்பாக ரூபா 6,880,139 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய ரூபா 136,433,538 தொகைக்கான 05 கணக்கு விடயங்கள் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 9,144,101 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | இணங்குகின்றேன் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 75,950,516 தொகைக்கான 13 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | இணங்குகின்றேன் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி. 104(4) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான கப் வண்டிக்கு மற்றும் டிபர் வண்டிக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் டிபர் வண்டி விபத்தின் பின்னர் திருத்த வேலைக்காக ரூபா 355,924 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும் என. |
| (ஆ) | 2019 ஜூன் 17 திகதிய 09/2009(I) இலக்கங் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரிவு 02(I) | வெலிகம பிரதேச சபையின் பிரதியீட்டு ஊழியர் 04 பேரின் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக விரலடையாள இயந்திரத்தில் பதிவு செய்யாமல் கடமைகள் சாட்டப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 962,899 இற்கான நாளாந்த சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 இலக்கங் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரிவு 3 (xiv) மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 132(ஏ) | வெலிகம பிரதேச சபையினால் சமய நிகழ்வு ஒன்றிற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 378,330 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்ததுடன், அதற்காக அமைச்சரிடம் எழுத்துமூல ஆவணத்தின் மூலம் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | இணங்குகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம், 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக விதி) மற்றும் 2022 ஏப்ரல் 26 திகதிய 3/2022 தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது வெலிகம பிரதேச சபையின் செயற்பாடுகளை விளம்பரப்படுத்துவது என குறிப்பிட்டு தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 1,150,000 தொகை செலுத்தியிருந்ததுடன், ஏற்பாடுகளுக்கு புறம்பாக இந்த செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சேதனப் பசளை விற்பனையினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு என. | விதிகள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (உ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 19 மற்றும் 132 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 08 கால்வாய்களைத் தோண்டி சேற்றினை அகற்றுவதற்காக சபைக்கு சொந்தமான ஸ்கவேடர் இயந்திரத்தை பயன்படுத்துவதற்காக 147 மணித்தியாலங்களுக்காக 882 லீற்றர் மற்றும் 19 கால் வாய்களை அபிவிருத்தி செய்வதற்காக 04 ஒப்பந்தக்காரர்கள் மற்றும் விவசாய அமைப்பொன்றிற்கு ரூபா 5,871,477 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் பிரதேச சபையின் விடயப் பரப்பின் கீழ் அடங்காத இந்த கருமத்திற்காக அங்கீகாரம் இன்றி சபை நிதியத்தில் இருந்து செலவு செய்தல் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | அனைத்து நிறுவனங்களின் இணக்கத்துடன் செயற்படுத்தப்பட்டது என. | ஒப்பந்த வேலைகள் முறைப்பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினால் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 89,001,946 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 95,226,175 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பீட்டு வருமானம் ரூபா | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா | 2021 மதிப்பீட்டு வருமானம் ரூபா | 2021 சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம ரூபா | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| i. | வீதவரி மற்றும் வரி | 31,735,300 | 22,693,922 | 16,944,134 | 30,999,727 | 27,035,300 | 27,232,944 | 18,059,413 | 25,249,939 |
| ii. | வாடகை | 6,370,000 | 2,896,359 | 3,483,791 | 1,709,922 | 4,240,000 | 2,280,037 | 1,830,580 | 2,297,354 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 11,960,100 | 2,570,341 | 1,891,059 | 876,191 | 12,960,100 | 4,039,889 | 4,233,216 | 196,909 |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 30,918,100 | 135,864,078 | 136,205,521 | 4,152,703 | 19,388,100 | 16,861,928 | 14,583,602 | 4,494,146 |
| | மொத்தம் | 80,983,500 | 164,024,700 | 58,524,505 | 37,738,543 | 63,623,500 | 50,414,798 | 38,706,811 | 32,238,348 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 25,103,295 தொகையாகக் காணப்பட்டதுடன், 22708 வீதவரி அலகுகள் தொடர்பாக ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 22,499,643 தொகையுடன் ரூபா 47,602,938 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடு ரூபா 10,665,396 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு 17124 வீதவரி அலகுகளுக்கு உரிய ரூபா 30,863,928 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியளவில் சபைக்குச் சொந்தமான 62 கடையறைகள் காணப்பட்டதுடன், அவற்றில் 35 கடையறைகளில் இருந்து ரூபா 1,324,563 இற்கான நிலுவை கடையறை வாடகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்குச் சொந்தமான 02 வர்த்தக தொடர் கட்டிடங்களில் அமைந்துள்ள 03 கடையறைகள் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | வாடகை உடன்படிக்கைகளுக்கு அணுக வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியளவில் சபைக்குச் சொந்தமான 19 கடையறைகள் தொடர்பாக கடை வாடகை உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காததுடன், வெலிகம பிரதேச சபைக்குச் சொந்தமான 03 வர்த்தக தொடர் கட்டிடங்களைச் சேர்ந்த 05 கடையறைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 455,133 தொகை மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (உ) | அனுமதிப் பத்திரக் கட்டணம் ஆரம்ப நிலுவை ரூபா 196,909 தொகையாகக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான ரூபா 2,570,341 தொகை சிட்டையிடலுடன் ரூபா 2,767,250 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது. | இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை ஏனைய வருமானங்களின் மீதி ரூபா 4,494,146 தொகையாகக் காணப்பட்டதுடன், ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 135,864,078 தொகையுடன் ரூபா 140,358,224 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 136,205,521 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 4,152,703 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 4,390,418 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 206,577,545 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | இணங்குகின்றேன் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் | இணங்குகின்றேன் என. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடுதிகளின் பெறுவனவுகளின் மீது 1% கட்டண அறவீடு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் வெலிகம பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 75 ஹோட்டல்களில் இருந்து அவ்வாறு கட்டணம் அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (உ) | வெலிகம பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 61 அறிவித்தல் பலகைகளில் இருந்து ரூபா 611,861 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டு இறுதிவரை அறவீடு செய்திருக்கவில்லை. | இணங்குகின்றேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

**2.3 மிகை விதிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டிய ஆட்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் ரூபா 6,109,042 தொகைக்கான 05 மிகை விதிப்புக்கள் விதிக்கப்பட்டிருந்தது. | உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெலிகம பிரதேச சபைக்கு சொந்தமான சேதனப் பசளை செயற்களத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மாட்டுத் தொழுவத்திற்கு மீளாய்வாண்டின் போது இடையிடையே கிடைத்திருந்த 12 மாடுகள் தொடர்பாக தகவல்கள் 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 194 இன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் பொருட் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆகஸ்ட் 17 திகதிய PR/01/01 இலக்கங் கொண்ட மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சசுச் செயலாளரின் சுற்றறிக்கைக்கு இணங்க வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி அளவில் செலவிடப்பட்டிருந்த ரூபா 11,686,000 இற்கான செலவு ஒன்று மின்சார சபையில் இருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 23(5) மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்கள் உட்பட்ட 2021 ஜூலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் II பகுதியில் 4(i)மற்றும் 13(2) ஆம் கட்டளைகள் பிரமாணங்களுக்கு புறம்பாக வெலிகம பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் பண்டாரமுள்ள பகுதியில் காலி முதல் மாத்தறை வரையான பிரதான பாதையில் இடது புறத்தில் 03 ரூட்கள் 24 பர்சஸ்கள் காணி பகிர்வு செய்து விற்பனை செய்தல் தொடர்பாக சபையினால் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக் கொண்டமை தொடர்பாக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத 12 நிர்மாண வேலைகள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்களில் அடங்கியுள்ள 2021 ஜூலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணையின் பிரகாரம் செயற்பட்டு ரூபா 5,252,038 இற்கான கட்டணம் அறவீடு செய்து அந்த நிர்மாண வேலையை முறைப்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | BA/2014/199 இலக்கங் கொண்ட கட்டிட அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த வரைபுக்கு புறம்பாக நான்காம் மாடி ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக இரண்டு கட்டிடங்களும் நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. இந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்களில் அடங்கியுள்ள 2021 ஜூலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டு ரூபா 516,060 இற்கான கட்டணம் அறவீடு செய்து நிர்மாண வேலையை முறைப்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.3 கருத்து முரண்பாட்டுத் தன்மையுடனான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபை வளாகத்தில் எரிபொருள் பௌசர் தொட்டி ஒன்று நிர்மாணிப்பதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 3,742,404 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், பௌசர் தொட்டி மற்றும் அதற்குரிய உபகரணங்கள் கொள்வனவு செய்தல், பொருத்துதல் காப்புக் கவிகை ஒன்று தயாரித்தல் 1988 (நிதி மற்றும் நிர்வாகம்) விதி மற்றும் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதே போல் தேக்கப்பட்டிருந்த டீசல் நிரப்பப்பட்ட பௌசரின் தொட்டி 02 இடங்களில் எண்ணெய் கசிவு ஏற்பட்டு காணப்பட்டது. | இணங்குகின்றேன் என. | விதிகள் மற்றும் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | விவசாய நவோதய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விதைகள் மற்றும் கன்றுகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,195,520 இற்கான தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன், 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 211, 207 மற்றும் நிதிப் பிரமாணம் 237 இற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன், கன்றுகள் வினியோகிக்கப்பட்ட பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வெலிகம பிரதேச சபையின் திட்டமிடல் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காத 02 கட்டிட வரைபுகள் தலைவரினால் தனது உத்தியோகபூர்வ முத்திரையை பதித்து அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் வெளிக்கள பரிசோதனை திகதி அளவிலும் 1205.3 சதுர அடி வதிவிட இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று மற்றும் வாணிப கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | திட்டமிடல் குழுவின் பரிந்துரை மீது செயற்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது கம்புறுகமுவ குப்பை செயற்திட்டத்துக்கு அண்மையில் அமைந்துள்ள நில அளவைப்பட இலக்கம் 35/215 கொண்ட காணியில் இருந்து 100 பர்சஸ்கள் கொள்வனவு செய்யும் போது அப்போதைய தலைவருக்கு சொந்தமான காணி ஒன்று ரூபா 1,000,000 தொகைக்கு மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு விற்பனை செய்து அந்தக் காணியை மீண்டும் 02 மாதங்களில் ரூபா 9,400,000 தொகைக்கு சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | முறையான செய்முறை ஒன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 4 ஆவது அத்தியாயத்தின் வழிகாட்டல்களுக்கு முரணாக பெறுகைத் திட்டத்தில் அடங்கி இருக்காத ரூபா 7,227,904 தொகை பெறுமதியான 12 பெறுகைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டு இருந்ததென தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. | இணங்குகின்றேன் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.8.5 (அ) பிரகாரம் வெலிகம பிரதேச சபையினால் ரூபா 5,075,834 தொகை பெறுமதியான 18 கொள்வனவுகள் தொடர்பாக தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்பித்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | வெலிகம பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் கிலோ வோட் 10 (10kw) அளவிலான சூரிய சக்தி பெனல் ஒன்று பொருத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,752,500 இற்கான செலவொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக செயற்திட்ட அறிக்கை | இணங்குகின்றேன் என. | விதி மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிப்பதற்கு மற்றும் 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 177 மற்றும் 178 மற்றும் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக செயற்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 208 இன் பிரகாரம் களஞ்சியம் மற்றும் பண்டங்கள் வழங்கல்கள் இயன்ற அளவு போட்டி அடிப்படையில் மேற்கொள்வதற்கு செயற்பட வேண்டுமெனினும், சேதனப் பசளை செயற்களத்தில் பல்வேறு நிர்மாண வேலைகளுக்காக 24 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,566,477 தொகை பெறுமதியான பண்டங்கள் மற்றும் உபகரணங்களுக்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்டு இருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிர்வாகத்ததில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது 10 நிர்மாண வேலைகளுக்காக 10 சந்தர்ப்பங்களில் தனியார் தரப்பினருக்கு முற்பணங்கள் ரூபா 5,237,548 தொகையும் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு சங்கங்களுக்கு ரூபா 793,000 தொகை செலுத்தப்பட்டு இருந்ததுடன், தனியார் ஒப்பந்தகாரர்களுக்கு முற்பணங்கள் செலுத்தும் போது பெற்றுக் கொண்ட முற்பணத்திற்கான பிணை முறி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | ஒப்பந்தங்கள் முறைப் பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கம்புறுகமுவ குப்பை செயற்களத்திற்கு நுழையும் மற்றும் உட்பகுதி பாதைகளை அபிவிருத்தி செய்வதற்கான நிர்மாண வேலைக்கு கொங்கிரீட் துண்டுக் கற்கள் பரப்பும் போது மேற்கொள்ளப்பட்டிருக்காத 20.5 மீற்றருக்கான அளவிற்காக ரூபா 274,243 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் உத்தியோகத்தரின் இடமாற்றம் காரணமாக அளவையினை காட்டுவதில் குறைபாடு ஏற்பட்டது எனவும் அவரின் கூற்றின் படி அந்த அளவை சரியானது எனவும். | நிறைவேற்றப்பட்ட வேலைக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியளவில் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த சேவையை விட்டு விலகிச் சென்றிருந்த மற்றும் இறந்த 19 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட | இணங்குகின்றேன் என. | கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,282,344 தொகைக்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 03/2022 இலக்கங் கொண்ட 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றிக்கையின் மூலம் ஊழியர்கள் ஆட்சேர்த்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் வெலிகம பிரதேச சபையினால் ஊழியர் மிகை காணப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத 05 பதவிகளுக்காக அமைய அடிப்படையில் 07 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |